உ
சிவமயம்

# ஆன்மீக அறிவை அடுத்த சந்ததியினரிடையே ஊக்குவிப்போம்

## "பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்" நடாத்தும் தமிழ் / ஆங்கிலப் பேச்சுப் போட்டியும், திருமுறை ஓதற் போட்டியும், நாடகப் போட்டியும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலே, புலம்பெயர்ந்த எம் சிறுவர் சிறுமியர்களுக்கிடையேயான சைவசமய அறிவையும், புலமையையும் ஊக்குவிக்கும் பொருட்டு, பின்வரும் பத்து சைவ ஆலயங்களும் ஒன்றாகச் சேர்ந்த "பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்" பேச்சுப் போட்டிகளையும், திருமுறை ஓதற் போட்டியையும் (15) வது ஆண்டாக நிகழ்த்த உள்ளது.

பேச்சுப் போட்டியானது தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தனித்தனியாக நடைபெறும். எல்லாப் போட்டிகளும் முற்றிலும் இலவசம்.

1. ஸ்ரீ விநாயகர் ஆலயம், விம்பிள்டன்
   **123-125 Effra Road, Wimbledon, London SW19 8PU. Tel.: 020 8542 7482**
2. இலண்டன் சிவன் கோயில், லூயிஷம்
   **4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES. Tel.: 020 8318 9844**
3. ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயில், ஈலிங்
   **5 Chapel Road, Ealing, London W13 9AE. Tel.: 020 8810 0835**
4. ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில், ஸ்ரோன்லி
   **Stoneleigh Prayer Hall, Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE. Tel.: 020 8393 8147**
5. ஸ்ரீ முருகன் கோயில், உயர் வாசற் குன்று
   **200A Archway Road, London N6 5BA. Tel.: 020 8348 9835**
6. அருள்மிகு சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் கோவில்
   **2, Salisbury Road, London E12 6AB.**
7. கறோ ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
   **Charisma Building, 59B Rear of Station, Middlesex HA1 2TY**
8. ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்
   **299-306 Ley Street, Ilford IG1 4BN**
9. ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
   **2-4 Bedford Road, London E17 4PX**
10. குறோலி ஸ்ரீ சுவர்ண காமாட்சி அம்மன் ஆலயம்
    **UNIT 1B Stephensonway, Three Bridges, West – Sussex RH10 1TN**

**"நமது சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணிடுவோம் வாரீர்"**

## போட்டிக்கான விதிகள்:

1. போட்டிகள் இரண்டு நிலைகளில் நடைபெறும்.
2. புலம் பெயர்ந்து எந்த நாட்டில் வாழ்பவரும் பங்கு பற்றலாம். பின்வரும் விதிகள் யாவர்க்கும் பொதுவானவை.
3. திருமுறைஓதல் போட்டியும், பேச்சு போட்டியும் 5வயதிற்குட்பட்ட, 9 வயதிற்குட்பட்ட , 13 வயதிற்குட்பட்ட, 19 வயதிற்குட்பட்ட வயது எல்லைக்குள் நடைபெறும்.
4. போட்டியிலே பங்கு பற்றுவதற்காக எக்கட்டணமும் அறவிடப்படமாட்டாது. போட்டியாளரின் போக்குவரத்திற்கான செலவுகளும் கொடுக்கப்படமாட்டாது.
5. ஒருவர் தன் வயதெல்லைக்கான எத்தனை போட்டிகளிலும் பங்கு பெறலாம்.
6. முற்றிலும் எம்மால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட பேச்சுகள் மட்டுமே இப்போட்டியில் பேசமுடியும். இப்பேச்சுக்களை ஒன்றியக் கோயில்களில் பெற்றுக்கொள்ளளாம்
7. திருமுறை ஓதற் போட்டியில் பங்குபெற்றும் மாணவர்கள் ஆலயத்தில் நின்று இறைவனை வழிபடுவது போல் திருமுறைகளை ஓதல்வேண்டும்.
8. திருமுறை ஓதுபவர்கள் சுருதிப்பெட்டியையும், தாளத்தையும் பாவிக்கலாம். சுருதிப் பெட்டியைப் பாவித்து பிழையான சுருதியில் பாடினால் புள்ளிகள் கழிக்கப்படும்.
9. நாடகப்போட்டி இரண்டு வயது எல்லைகளுக்குள் நடைபெறும். (30 வயதிற்கு கிழ்/ 30 வயதிற்கு மேல்) இது தமிழையும் சமயத்தையும் வளர்க்கும் பாணியில் இருக்க வேண்டும்.
10. ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூவர் மட்டும் இருப்பார்கள். இவர்கள் பங்குபெறும் பிள்ளைகளின் உறவினர்களாக இருக்கமாட்டார்கள்.
11. நடுவர் குழுவின் தீர்ப்பே போட்டியின் இறுதி முடிவாகும்.
12. போட்டிகளில் முதலாவதாக வந்த மாணவன்/மாணவிக்கு சைவ மகாநாட்டில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.
13. மேற்குறிப்பிட்டவை தொடர்பான எவ்விடயங்களையும் போட்டிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். (போட்டி பொறுப்பாளா் திரு. சி.பத்மமோகன் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் - 0208 660 4567)
14. தவிர்க்க முடியாத காரணங்களால் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டால் உங்களுக்கு அறிவிக்கப்படும்.
15. இறுதிப்போட்டி (15-09-2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9:00க்கு உயர்வாசற்குன்று ஸ்ரீ முருகன் கோவிலில் நடைபெறும்.
16. விண்ணப்பப்படிவங்களுக்கான இறுதித்திகதி 30.07.2013 இதுவே பங்கு பெறுவோவோரின் வயதைத் தீர்மாணிக்கும் திகதியாகும்.

**"நமது சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணிடுவோம் வாரீர்"**

“நமது சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணிடுவோம் வாரீர்”